சூரியநல்லூர் கிராம ஊராட்சி தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : S.வனிதா

ந.க.எண் : 2/2023-24 நாள் : 28.03.2024

பொருள் : மனைப்பிரிவு வரன்முறை திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், சூரியநல்லூர் கிராம ஊராட்சி, சூரியநல்லூர் கிராம ரீ.ச.எண் :552/6 ல் 2.28 ஏக்கர் (9232சமீ) பரப்பில் அமைந்த மனைப்பிரிவு 34 மனைகளை வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை எண் : 71 ஊரக வளர்ச்சி துறை நாள் : 16.06.2003

2. அரசாணை எண் :79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள் : 04.05.2017

3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண் : 4367/2019/டிசிபி2 நாள் :14.08.2021

4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் ந.க.எண்: J0WDI5I0/2023/TCP நாள் : 14.09.2023

****

உத்தரவு :

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், சூரியநல்லூர் கிராம ஊராட்சி, சூரியநல்லூர் கிராமம் ரீ.ச.எண் : 552/6 ல் 2.28 ஏக்கர் (9232சமீ)பரப்பளவில் புதியதாக அமைந்துள்ள 34 மனைகளுக்கு பார்வை 1 மற்றும் 2 ல் காணும் அரசாணையில் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதியுள்ள குடியிருப்பு மனைபிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT No : 257/2023 என்ற எண்ணிடப்பட்டு பார்வை 4ல் காணும் கடித்தின்படி தொழில்நுட்ப அளவிலான (Technical Approval) ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்கண்ட மனைகளுக்கு வழிகாட்டு மதிப்பில் (MARKET VALUE) 3% கீழ்கண்டவாறு வரன் முறை கட்டணம் உரிய அரசுத்தலைப்பில் வங்கிக்கணக்கில் ரூ.53352(ரூபாய் ஐம்பத்தி மூன்றாயிரத்து முன்னூற்றி ஐம்பத்தி இரண்டு மட்டும்) (சலான் எண் : 20240324000278) செலுத்துப்பட்டுள்ளது மற்றும் வளர்ச்சி கட்டணம் ஒவ்வொரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் 6609 ச.மீக்கு ரூ.165225/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தி ஐந்தாயிரத்து இருநூற்றி இருபத்தி ஐந்து மட்டும்) ஊராட்சி நிதிக்கணக்கில் (இரசீது எண் : 2023-2024/32/10/22/7/1) செலுத்தப்பட்டும் பணம் வங்கியில் செலுத்தியதற்கான சலான் இணைக்கப்பட்டுள்ளது.

வ எண்	க.ச.எண்	ஏக்கர்/ சதுர அடி	வழிகாட்டி மதிப்பு ஏக்கர் க்கு ரூ. 780000/- வீதம்	வழிகாட்டு மதிப்பிற்கான வரன் முறைக் கட்டணம்
1.	552/6	2.28 ஏக்கர் (9232சமீ)	1778400	53352

எனவே மேற்படி கட்டணங்கள் யாவும் பெறப்பட்டுள்ளதாலும் திருப்பூர்நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வரைப்படத்தில் உள்ளபடி பொது உபயோகம் 34.00 ச.மீ, மின்சார வாரிய உபயோகம் 35.37 ச.மீ மனைபிரிவு சாலை 2553.62 சதுர மீட்டர் தாராபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் : 8437/2023 நாள் : 28.08.2023 ன் படி ஊராட்சிக்கு தானக்கிரயம் வழங்கப்பட்டு விட்டதாலும் பூங்கா பரப்பிற்கான 667.84 ச.மீற்கு அரசு வழிகாட்டி மதிப்பு தொகை ரூ.128893/- உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டதாலும் சூரியநல்லூர் கிராம ஊராட்சியில் புதிதாக அமைந்துள்ள 34 குடியிருப்பு மனைகளுக்கு பரிசீலனைக் கட்டணம் ரூ.6000/-(ரூபாய் ஆறாயிரம் மட்டும்) (இரசீது எண் : 2023-2024/32/10/22/7/1) ஊராட்சி நிதிக்கணக்கில் செலுத்தப்பட்டதை தொடர்ந்து தொழில்நுட்ப அளவிலான ஒப்புதல் (Technical Approval) வழங்கி உத்தரவிடப்பட்டதால் குடியிருப்பு மனைகளை வரன்முறைபடுத்தி மனை இட அனுமதி வழங்கி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

பார்வை 1 முதல் 4 வரையிலான அரசாணை மற்றும் கடித்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

தலைவர்
தலைவர்/ செயல் அலுவலர்
சூரியநல்லூர் கிராம ஊராட்சி

பெறுதல்,

1. திரு.P.தமிழரசு
   கதவு எண் : 196/11
   சக்கரைவலசு,
   எடக்கல்பாடி,
   தாராபுரம் தாலுக்கா,
   திருப்பூர் மாவட்டம் - 639202.

நகல்

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருப்பூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர்.
3. சார்பதிவாளர் அலுவலகம், தாராபுரம்.